69—

மீன் பதப்படுத்தும் நிலையம்

***106185—திரு. டி. மூர்த்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, கோவளத்தில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி, கோவளம் மீனவர் கிராமத்தில், மீன் பதப்படுத்தும் குளிர் பதன நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.*

திரு. டி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தைக் கட்டியவரும், hi-tech சிற்பியுமான நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், நமது மாண்புமிகு துணை முதல்வர் டாக்டர் தளபதியார் அவர்களுக்கும், இந்தக் கேள்வி கேட்க வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள கோவளம் பகுதியானது, மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் முக்கியமான ஓர் இடம். இப்பகுதியில் அதிக அளவில் வஞ்சரம், இறால், வாளை, பாறை, வௌவால், கொடுவா, திருக்கை, சீலா, நெத்திலி போன்ற மீன்கள் மற்றும் நண்டு வகைகள் அதிக அளவில் கிடைக்கின்ற காரணத்தினாலே, அங்கே பிடிக்கப்படும் மீன்களை அங்கேயே வைத்துப் பதப்படுத்த மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோவளம் மீனவர் கிராமத்தில் விசைப் படகுகளோ, உள் பொருத்தும் இயந்திரப் படகுகளோ இல்லை. அவர்கள் F.R.B., கட்டுமரம் மற்றும் மரக் கட்டுமரம்மூலமாக மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். கடந்த இரண்டாண்டுகளாக அங்கே எடுத்து வந்த கணக்கின்படி, மீன்பிடிப்பின் அளவு சராசரியாக நாளொன்றுக்கு 542 கிலோ கிராம் முதல் 812 கிலோ கிராம் மட்டுமே, அதாவது ஒரு டன்னுக்கும் குறைவாகவே கிடைத்து வருகிறது. இவை அன்றாடத் தேவைகளுக்கு அப்போதே விற்பனையாகின்றன.

மேலும், உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கோவளம் மீனவர் கிராமம் ஒரு சுற்றுலாப் பகுதியாகும். அந்தப் பகுதியிலே சுற்றி இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களும், அந்தப் பகுதிக்கு தினமும் வந்து செல்கின்ற வாய்ப்பைப் பெறுகிறார்கள். வந்து செல்கின்றவர்களும் அங்கே கிடைக்கின்ற மீன்களை வாங்கிச் செல்கின்ற காரணத்தால், இருப்பு வைக்கும் அளவிற்கு அங்கே மீன்பிடிப்பு இல்லை. ஆகவே, மீன் பதப்படுத்தும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு தினந்தோறும் ஒவ்வொரு மீனவக் குடும்பமும் 1 டன், 2 டன் மீன்கள்கூட எடுத்து வருகிறார்கள். எனவே, மீன் பதப்படுத்தும் நிலையம் அமைக்க தயவுகூர்ந்து மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும்.

அதேநேரத்தில், தமிழகத்தில் மீன்பிடித் தொழிலை நம்பி பல இலட்சம் மீனவக் குடும்பங்கள் உள்ளன. ஆண்டுதோறும் மீன் இனப்பெருக்கத்திற்காக மீன்பிடிக்க 45 நாட்கள் தடை விதிக்கிறார்கள். இதனால் மீனவக் குடும்பங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

எனவே, இதுபோன்ற காலக்கட்டங்களில், மீன்பிடிக்கத் தடை விதித்த காலங்களில் ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் மாதம் 3,000 ரூபாய் வழங்க அரசு முன்வருமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அன்றாடம் 1 டன், 2 டன் என்று மீன் கிடைப்பதில்லை. ஏதோ மாதத்தில் ஒரு நாளோ அல்லது வருடத்திலே தொடர்ந்து 4 நாட்களோ, 5 நாட்களோ இதுபோன்று ஒரு டன், 2 டன் மீன்கள் கிடைப்பது வழக்கம். தொடர்ந்து இது போன்று அதிகமான மீன்கள் அந்தப் பகுதியிலே கிடைப்பதில்லை. அதிகமான மீன்கள் வரத்து இருந்தால்தான் அது போல ஒரு குளிர்பதன அறை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, மீன்பிடித் தடை செய்யப்பட்ட காலமாக இருக்கக்கூடிய அந்த 45 நாட்களுக்கு தமிழக வரலாற்றில் முதன்முதலாக நம்முடைய வரலாற்று முதல்வர் ஐயா கலைஞர் அவர்கள்தான் கடற்கரையிலே இருக்கக்கூடிய 2 இலட்சம் மீனவக் குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 500 ரூபாய் வீதம், 10 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்கின்றார்கள். அதற்கு என்னுடைய மானியக் கோரிக்கையிலே பதில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

பால் குளிரூட்டும் நிலையம்

***106316—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—